## <u>பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயர் பதிவு செய்திடுவீர்</u>

## <u>5 ஆண்டுகள் கால அவகாசம் நீட்டிப்பு</u>

பிறப்பு பதிவு குழந்தையின் முதல் உரிமை. பிறப்பு சான்றிதழ் குழந்தையின் சட்டபூர்வ குடியிரிமைக்கான அத்தாட்சி. குழந்தை பிறந்த 21 நாட்களுக்குள் பிறப்பினை பதிவு செய்து இலவச பிறப்பு சான்றிதழ் பெற பிறப்பு இறப்பு பதிவு சட்டம், 1969 வழி வகை செய்கிறது. பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயரை பதிவு செய்தால் மட்டுமே அது முழுமையாக சான்றிதழ் ஆகும்.

பிறப்பு சான்றிதழ் குழந்தை பள்ளியில் சேர, வாக்காளர் அடையாள அட்டை பெற, வயது குறித்து ஆதாரம், ஓட்டுநர் உரிமம் பெற, பாஸ்போர்ட் மற்றும் விசா உரிமம் பெற இன்றிமையாத ஒன்றாக உள்ளது.

ஒரு குழந்தையின் பிறப்பு, பெயரின்றி பதிவு செய்யப்பட்டிருப்பின் அக்குழந்தையின் பிறப்பு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 12 மாதத்திற்குள் குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளர் எழுத்து வடிவிலான உறுதிமொழியை சம்மந்தப்பட்ட பிறப்பு இறப்பு பதிவாளரிடம் அளித்து எவ்வித கட்டணமுமின்றி பெயர் பதிவு செய்திடலாம். 12 மாதங்களுக்குப் பின் குழந்தையின் பெயரினை, பதினைந்து வருடங்களுக்குள் உரிய கால தாமதக் கட்டணம் செலுத்தி பதிவு செய்திடலாம்.

<u>**திருத்தி அமைக்கப்பட்ட தமிழ்நாடு பிறப்பு, இறப்பு பதிவு விதிகள் 2000ன் படி,**</u>

1.1.2000 க்கு முன் பிறந்த குழந்தைகளுக்கு 31,12.2014 பெயர் வரை பெயர் பதிவு செய்திட வழி வகை செய்யப்பட்டது.

மேற்கண்ட கால அளவு முடிவுற்ற பின்னும் 5 ஆண்டு கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு 31.12.2019 வரை குழந்தையின் பெயர் பதிவு செய்திட அரசு ஆணை பிறப்பித்தது. தற்போது மேற்சொன்ன காலஅவகாசம் 31.12.2024 வரை 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒரு முறை குழந்தையின் பெயரை பதிவு செய்த பின் எக்காரணம் கொண்டும் மாற்ற இயலாது. எனவே, குழந்தையின் பெயரை இறுதியாக முடிவு செய்தப் பின் சம்மந்தப்பட்ட பிறப்பு இறப்பு பதிவாளரை அணுகி உறுதிமொழி படிவம் அளித்து பதிவு செய்யலாம்.

**<u>குழந்தையின் பெயரினை பதிவு செய்ய எங்கு விண்ணபிக்க வேண்டும் ?</u>**

| பிறப்பு பதிவு செய்யப்பட்ட இடம் | அணுக வேண்டி அலுவலர் |
|---|---|
| 1-15 மண்டல அலுவலகங்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் வார்டு அலுவலகங்கள் (1 முதல் 200 ) | சம்மந்தப்பட்ட சுகாதார ஆய்வாளர்கள், |

இவ்வாறான கால அவகாச நீட்டிப்பு இனிவரும் காலங்களின் வழங்கிட இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டுட பெயருடன் கூடிய பிறப்பு சான்றிதழ் பெற்றிடுவீர்.